யூன் June 2011

சமாதானம் தரும் கிருபையின் ஆண்டு

பள்ளத்தாக்கின் லீலி



தேவனுடைய ஆசீர்வாதங்கள்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்."

(ஆதியாகமம் 12:2)

சத்திய வேத திருச்சபையின் ஆராதனை ஒழுங்குகள்

- செவ்வாய்க் கிழமைகளில் மாலை 6:30 மணிக்குஜெபமும் வேதப்படிப்பும்: **250 Warden Ave.**
- சனிக்கிழமைகளில் உபவாச ஆராதனை காலை 9:30 மணிக்கு **1140 Bloor St. West.**
- ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10:45 மணிக்கு தியான ஆராதனை. **250 Warden Ave.**
- ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3:30 மணிக்கு தியான ஆராதனை **1140 Bloor St. West.**
- விழிப்பு இரவு ஜெப ஆராதனை மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை இரவு 10:30 மணிக்கு **250 Warden Ave.**

மாதத்தின் முதல் ஞாயிறு காலை, மாலை ஆராதனையில் திருவிருந்து பரிமாறப்படும்.

ஆசிரியர் கடிதம்

அன்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

உலகத்தைப்படைத்த சிருஸ்டிகராகிய தேவனால் சிருஸ்டிக்கப்பட்ட பிள்ளைகளே! உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். இந்த உலகத்திலே நீங்கள் எந்தக் காரியத்தினாலாவது தோல்வியுற்று இருக்கலாம். குறைவோடு இருக்கலாம். மற்றவர்கள் உங்களை தரக்குறைவாக நடத்தியிருக்கலாம். அல்லது நீங்கள் உங்களையே ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று குறைவாக, பரிதாபமாக சிந்தித்துக் கொண்டு இருக்கலாம். அப்படிப்பட்ட உங்களுக்கு உயிரூட்டுகிற செய்தி உங்களுக்காக இயேசு என்ற இறைவன் இருக்கிறார். உங்களை மீட்கும்படியாக பரலோகத்தில் இருந்து வந்த தெய்வம். உங்களை நன்றாக வாழும்படி விரும்புவது மட்டுமல்ல, வாழவும் வைக்கிறார்.

நான் ஒரு இந்து குடும்பத்தைச் சேர்ந்தவள். இன்றைக்கு 23 வருடங்களுக்கு முன்பாக குறைவோடு இருந்தேன். பல தோல்வியோடு இருந்தேன். நான் இனி ஒன்றுக்கும் உதவாதவள் என்றதாழ்வு மனப்பாண்மையோடு அந்நிய தேசத்தில் அந்நியனாக, இந்த உலகத்திலே உறவுகள் இருந்தும் ஒருவருமே இல்லாதவளாக இருந்தேன். ஏதோ வாழவேண்டும் என்று வாழ்ந்தேன். ஆனால் ஆண்டவராகிய இயேசு வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் தந்தார். இயேசு எனக்கு வாழ்வு கொடுத்தார்.

இன்று அன்பான கணவன் 3 நல்ல பிள்ளைகள். நல்லதொரு Church அன்பானதேவ பிள்ளைகள் என்று குடும்பமாக வாழ வழி தந்தார். ஆகையால் அன்பான பிள்ளைகளே நீங்கள் உங்கள் குறைவின் மத்தியிலே தேவனைத் தேடும் போது தேவன் உங்களை நிறைவாக்குவார். தோடர்ந்து இந்தப் புத்தகத்தைப் படியுங்கள். உங்கள் வாழ்க்கை மாறும், உங்கள் தோல்வி மாறும், நீங்கள் சுகமாய் வாழ்வீர்கள். நமது திருச்சபையின் போதகர் பாஸ்டர் எலிசா லோகன் உங்களுக்கு அன்புடன் வாழ்த்துதல் சொல்லுகிறார். எங்கள் திருச்சபை மக்களும் உங்களை அன்புடன் வரவேற்கிறார்கள். எங்கள் திருச்சபையின் ஆராதனை Waves of Power (Web Internet) இணையதளத்தின் மூலமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 10:00 மணி தொடக்கம் மதியம் 1:00 மணி வரை நீங்கள் கேட்கலாம். தேவன் தாமே உங்களோடு இருப்பாராக. “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.” “ஆகையால் குமாரன் (இயேசு) உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்.” (யோவான் 8:32,36)

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

<u>அன்பரின் ஊழியத்தில் சகோதரி</u>

<u>நகோமி எலிசா லோகன்</u>

“ஒருவன் என் வாத்த்தையைக் கைக் கொண்டால், அவன் என்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யா கவே உங்களுக்குச் சொல்லுகிறேன்...”

(யோவான் 8:51)

“என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்...” (யோவான் 16:33)

இயேசு சொல்கிறார், “...உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக...” (யோவான் 20:21)

விசுவாசித்தேன் ஆகையால் பேசுகிறேன்; (சங்கீதம் 116:10)

பாஸ்டர் எலிசா லோகன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், சத்தியவேத திருச்சபை சார்பாக உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த ஆண்டு எல்லோருக்கும் ஒரு கிருபையின் ஆண்டாக மாறும் என்பதில் எந்தேகமே இல்லை. அதனால் தான் சங்கீதக்காரன் இப்படியாகச் சொன்னார் "விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; என்று (சங்கீதம் 116:10) பார்க்கிறோம்.

விசுவாசித்தால் தேவ மகிமையைக் காணலாம். விசுவாசித்தால் தேவனுடைய அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளைச் சுகமாக்கும். என்னை விசுவாசிக்கிறவன் என்னை அனுப்பியவரை விசுவாசிக்கிறான். ஒரேபேறான குமாரன் இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அற்புதங்கள், அடையாளங்கள் இப்படியாக ஆண்டவராகிய இயேசு மூலமாக வருகிற நன்மைகளுக்கு முடிவில்லை, அளவில்லை. இப்படியாக நாம் கர்த்தரிடத்தி லிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுகிறோம். அதே நேரம் விசுவாசத்தினால் வருகிற ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசித்தேன் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன், இப்பொழுதும் பெறுகிறேன் அதனால் உங்களுடன் நான் பேசுகிறேன். பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியர் சபைக்கு நிருபம் எழுதும்போது "விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களா யிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம் என்று எழுதியிருக்கிறதை 2 கொரிந்தியர் 4:13 இல் பார்க்கி றோம். அதே மாதிரியான விசுவாசம் நமக்கும் வேண்டும். அதனால் தான் இயேசு, "நீங்கள் விசுவாச முள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள் என்றார்."

(மத்தேயு 21:22)

உறுதியான பெரிய கட்டிடங்களுக்கு எப்படியாக உறுதியான அஸ்திபாரம் தேவையோ அதேபோல உறுதியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும் உறுதியான விசுவாசம் தேவை. அதனுடைய ஆரம்பம் தான் ஆண்டவராகிய இயேசுவையே முற்றிலும் நம்பி அவரிலே சார்ந்து கொள்வது அந்த விசுவாசம். அன்று சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ முற்றிலுமாக தேவனையே நம்பியிருந்தார்கள். தேவன் மேல் விசுவாச முள்ளவர்களாக இருந்தார்கள். "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்." (தானியேல் 3:17) இந்த தேவனுடைய பிள்ளைகளுக்கு பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள் வந்த வேளையிலே அவர்களுடைய விசுவாசம் நாம் ஆராதிக்கிற நம்முடைய தேவன் எல்லாவற்றிலும் இருந்து விடுவிக்க, காத்துக்கொள்ள அவர் வல்லவராய் இருக்கிறார் என்று. அதேபோல உங்களுக்கு குறைவு, பாடுகள், உபத்திரவங்கள் வரும்போது நம்முடைய விசுவாசம் இன்னும் அதிகரிக்க வேண்டும். என் தேவன் எல்லா

பிரச்சனைகளிலுமிருந்து நம்மை விடுவிக்க வலல்லவர். அவரால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. அவர் சொன்னால் எல்லாம் ஆகும். இயேசுவை நோக்கிக் கூப்பிடுகிற வேளையிலே அவர் ஆசீர்வதித்து வழி நடத்திக் காக்கிறவர்,

பவுல் அப்போஸ்தலன் கூறும்போது. "...நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவரயிருக்கிறாரென்று நிச்சயித்து மிருக்கிறேன். நீ கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு..." (2 தீமோத் 1:12-14) அதுமட்டுமல்ல வேதத்திலே எழுதப்பட்டிருக்கிற ஆசீர்வாதமான வார்த்தைகளையும் ஆண்டவராகிய கர்த்தர் இயேசுவையும் நாம் விசுவாசிக்க வேண்டும். அந்த ஆசீர்வாதமான வார்த்தைகளையும் தேவனையும் அன்று "ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்." (ஆதி 15:6 ரோமர் 4:3 கலாத்தியர் 3:6) அதனால் தான் அவன் வரவர விருத்தியடைந்தான். அந்த விசுவாசத்தில் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தின் உன்மைகளை எபிரெயர் 11: 8 இல் இருந்து தியானிக்கலாம். "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்."

ஆண்டவர் ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும் ஆசீர்வதித்தார். அதேபோல நீங்களும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தம். சகோதரரே, சகோதரிகளே நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். நீ எவ்வளவுக்கு எவ்வளவு துன்பப் படுகிறாயோ, வேதனைப் படுகிறாயோ அவ்வளக்கவ்வளவு நான் உன்னை ஆசீர்வதித்து இந்த உலகத்திலே உன்னை ஆசீர்வாதமாக்குவேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார்.

வேதத்திலே ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட மனிதர்களைக் குறித்து நாம் சற்றுத் பார்ப்போமாகில் "பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து; நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்புங்கள். உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியிலே நடமாடுகிறயாவும், சமுத்திரத்தின் மச்சங்கள்யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்." (ஆதி 9:1-3)

இப்படியாக நோவாவுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதம் பூமியிலுள்ள எல்லாவற்றையும் கையளிக்கின்றார். எந்த விதமான குறைவோ மனக்கவலையோ இருக்கக் கூடாது என்று எல்லாவற்றையும் நிறைவாகக் கொடுத்தார்.

அடுத்து அவர் ஆபிரகாமை தன்னுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டார். "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன்

சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்...” (ஆதி 22:17,18) இல் ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அந்த வார்த்தைகள் ஆதி 24:1 இல் நிறைவேறுகிறதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. “ஆபிரகாம் வயது சென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்.” ஆபிரகாம் கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்ததினால் அவன் மட்டுமல்ல அவனுடைய சந்ததியை ஆண்டவர் கைவிடாமல்க் காத்துக் கொண்டார்.

ஆதியாகமம் 26: 1 இல் சொல்லப்படுகிறது “ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை அல்லாமல், பின்னும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று; அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராவுக்குப் போனான். கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி; நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு. இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர் வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன். ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமானங்களையும் கைக்கொண்டபடியால், நான் உன் சந்ததியை வானத்து நட்சத்திரங் களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்....” என்று வசனம் 5 வரை பார்க்கிறோம்.

ஆபிரகாமுடை கீழ்ப்படிதலினாலே இந்த ஆசீர்வாதமன வார்த்தைகள் தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டு இருக்கிறது. அதனால் “ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்த தினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவனாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்.” (ஆதி 26:12,13)

எனக்கு அன்பான தேவனுடைய பிள்ளைகளே உங்களுடைய வாழ்க்கையிலும் ஆசீர் வாதம் வரவேண்டும், நாமும் முன்னேற வேண்டும், வரவர விருத்தியடைய வேண்டும், எல்லாவித பிரச்சனைகளும் தீரவேண்டும், ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் நமக்கும் கிடைக்க வேண்டும் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிற சகோதரனே, சகோதரியே உங்களுடைய விருப்பங்களை கர்த்தர் இயேசு நிறைவேற்றுவார். “அப்படியே ஆபிரகாம் தேவனை விருவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.” (கலாத்தியர் 3:6,7)

நம்முடைய வாழ்க்கையிலே மேலும் மேலும் ஆசீர்வாதம் பெருக வேண்டுமானால் முதலாவது விசுவாசம். இரண்டாவது தேவனோடு போராடி வெற்றி பெறுவது. அன்று யாக்கோபு யாப்போக்கு என்ற ஆற்றங்கரையிலே தேவனோடு போராடுகிறான். “அவர் (ஆண்டவர்) நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்; நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர்; உன் பேர் என்ன என்று கேட்டார் யாக்கோபு என்றான். அப்பொழுது

அவர்; உன் பேர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் எனப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். அப்பொழுது யாக்கோபு; உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்; நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார்." (ஆதி 32:26-29)

ஆசீர்வாதத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்:

1 மனிதர்களால் வருகிற ஆசீர்வாதம்.

2 பிசாசிடம் இருந்து வருகிற ஆசீர்வாதம்.

3 தேவனிடம் இருந்து வருகிற ஆசீர்வாதம்.

1 மனிதன் கொடுக்கிற ஆசீர்வாதம்:

1.மனிதன் கொடுக்கிற ஆசீர்வாதம் "தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருழுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்." (ஆதியாகமம் 27:28,29) இப்படியாக ஈசாக்கு தன் மகன் யாக்கோபை ஆசீர்வதித்தான்.

"யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின் மேல் படரும். வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன் மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; இதினால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்." (ஆதியாகமம் 49:22-24) இப்படியாக யாக்கோபு தன் மகன் யோசேப்பை ஆசீர்வதித்தான்.

"அவள் (அக்சாள்) புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல் வெளியைக் கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் (கணவனிடத்தில்) உத்தரவு பெற்றுக் கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் பார்த்து; உனக்கு என்ன வேண்டும் என்றான். அப்பொழுது அவள்; எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; எனக்கு வரட்சியான நிலத்தைத் தந்தீர்; நீர்ப்பாச்சலான நிலத்தையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது அவளுக்கு மேற்புறத்திலும் கீழ்ப் புறத்திலும் நீர்ப்பாச்சலான நிலங்களைக் கொடுத்தான்." (யோசுவா 15:18,19) பாருங்கள் அக்சாள் தனக்குக் கொடுத்த ஆசீர்வாதம் போதாது என்று தன் தகப்பனிடம் கேட்கிறாள். கேட்ட உடனே தகப்பன் தன் பிள்ளைக்கு பல நிலங்களைக் கொடுத்து விடுகின்றார். ஏனெனில் வேதத்திலே பார்க்கிறோம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆஸ்திகளைச் சேர்த்து வைக்க வேண்டும் அதுமட்டுமல்ல தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கவேண்டும் என்று. இது காலேப் தன் மகளுக்குக் கொடுத்த ஆசீர்வாதம். இவைகளும் ஆசீர்வாதத்தைக் கொடுக்கின்றன.

2. சாத்தானால் வருகிற ஆசீர்வாதங்கள்.

"அப்பொழுது பிசாசு அவரை (இயேசுவை) நோக்கி; நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்திரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்

என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிசத்திலே அவருக்குக் காண்பித்து; இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது; எனக்கு இஸ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உன்னுடைய தாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக; எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக....” (லூக்கா 4:3-8) இப்படியாக சாத்தான் சொன்ன மாத்திரத்தில் ஆண்டவராகிய இயேசு கடிந்து கொள்கிறார். ஏனெனில் சாத்தானால் வருகிற ஆசீர்வாதங்கள் ஒன்றும் நிலை நிற்பதில்லை.

அவையாவன சூதாட்டம், கொள்ளையடித்தல், மற்றவர்களை ஏமாற்றுதல், வெல்ஃபயர் எடுத்துக் கொண்டு வேலைசெய்தல், சிங்கிள் மதர் என்று சொல்லிக் கொண்டு கணவன் மனைவி சேர்ந்திருந்து பணம் சம்பாதித்தல், அரசாங்கத்திடம் உதவி பெறுவதற்காக வீடு வாசல்களை மற்றவர்கள் பெயரில் வைத்திருப்பது இப்படிப்பட்ட ஆசீர்வாதங்க ளைக் கொடுப்பவன் தான் பிசாசானவன். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் நிலை நிற்பதில்லை. இவைகள் கண்டுபிடிக்கப்பட்டால் ஏழுமடங்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் உலகத்திலே நிலை நிற்பதான ஆசீர் வாதங்கள் எவைகள் என்று சற்றுத் தியானிப் போமாகில், அவைகள் தான் தேவனால்வருகிற ஆசீர்வாதங்கள். அந்த ஆசீர்வாதங்கள் ஆபிரகாம் முதல் ஈசாக்கு, யாக்கோபு என்று தொடர்ந்து இன்று 2011 ம் ஆண்டு அவருடைய பிள்ளைகளுக்கும் ஊற்றாகப் பெருகி வருகிறது. அந்தப் பெருக்கத்துக்குக் காரணம் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்.

தேவனால் கொடுக்கப்படுகிற ஆசீர்வாதங்கள்.

“கர்த்தர் ஆபிராமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் புறப்பட்டுப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்;...... பூமியிலுள்ள வம்சங்க ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.” (ஆதியாகமம் 12:1-3)

ஆண்டவருடைய வார்த்தைக்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்து, ஆண்டவர் காண்பித்த தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்றான். அந்தத் தேசத்திலே தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். “......கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும் படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணு வேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக் கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்.” ஆதி 13: 14-17) அந்த ஆசீர்வாதமட்டுமல்ல “......அவனை வெளியே அழைத்து; நீ வானத்தை அண்ணார்ந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு

என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி; உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." (ஆதி 15:5)

இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் தேவனால் வருகிறது. இவைகள் நிரந்தரமானது. இப்படிப் பட்ட ஆசீர்வாதங்கள் சந்ததி சந்ததியாக நிலை நிற்பது மட்டுமல்ல நல்ல சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றன. வேதம் சொல்கிறது "அவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது; அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்கவேண்டு மென்று, இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன்; அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான்." (மல்கியா 2:5) மேலும் "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக; மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு; உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர் வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு முன்னறி வித்தது. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்." (கலாத்தியர் 3:6-9)

தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிற பிள்ளைகளுக்கு அவர் பெரிதான ஆசீர் வதங்களைக் கட்டளையிடு கிறார். "கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு;யாக்கோபு அவருடைய சுதந்திர வீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் (மோசேயைக்) கண்டு பிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை. பூமியினுள்ள உயர்ந்த ஸ்தானங்களின் மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன் மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார்." (உபாகமம் 32: 9-13)

உலகத்தில் எத்தனை கோடி ஜனங்கள் இருந்தாலும், அதில் ஒரு கூட்டத்தைச் சுட்டிக் காண்பித்து, நீங்கள் தான் என் பங்கு, என் சுதந்திரம், என் பிரியம், என் பாசம், எனக்கு உகந்தவர்கள் என்று சொல்லி ஆண்டவர் சந்தோஷப்படுகிறார். யாத் 19:5 இல் சொல்லப் படுகிறது. "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப் பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்..." ஆனால் ஆண்டவ ருடைய சத்தத்தைக்குச் செவிசாய்க்காது போகும் போது பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள், பிரிவினைகள் வருகிறது. "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும் படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ள வில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்ச மாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு

கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப் பண்ணினார்..." (உபா 7:6-8)

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிற படியினால், பிரியமானவர்களே, மாமிசத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்." அதை உணர்ந்த தாவீது சொல்கிறார். ஆண்டவரே, நீரே என் கன் மலையும், என்பங்குமாயிருக்கிறீர். நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்று பாடுகிறார். அதேபோல நாமும் ஆண்டவரை உயர்த்திப் பாடுவோம். அவர்சத்தத்தைக் கேட்போம். அவரே துதிக்குப் பாத்திரர். ஆமென்

விசுவாச வார்த்தைகள்: "நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடை நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியா திருந்தால் கெட்டுப் போயிருப் பேன், கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயி ருந்து, கர்த்தருக்கே காத்திரு." (சங்கீதம் 27:13,14)

"நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன். விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்..." (சங் 116 9,10)

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதி த்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை." (ஆபகூக் 2:3)

"கர்த்தாவே உமது வசனத்தின் படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர். உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித் தருளும், உம்முடைய கற்பனைகளின் பேரில் விசுவாசமாயிருக்கிறேன். நான் உபத்திரவப் படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்." (சங்கீதம் 119: 65-67)

"தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3: 15,16)

"ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்...... சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்...... ஆகையால் குமாரன் (இயேசு உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் ஒருவன் என் வார்த்தையைக் கைக் கொண்டால், அவன் என்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக் குச் சொல்லுகிறேன்..." (யோவான் 8:24,32,36,51,

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக் குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக் குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

(யோவான் 5: 24,25)

"பயப்படாதே நீ இராஜனுக்கு முன்பாக நிற்கவேண்டும்"

சகோதரி: நாகோமி எலிசா லோகன்

"...பயப்படாதே, நீ இராஜனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்..." (அப் 27:24)

அன்பான பிள்ளைகளே! இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

மேலே சொல்லப்பட்ட தேவவசனங்கள் எந்த சூழ்நிலையில் பார்க்கும்போது, பவுல் கைதியாக கப்பல் ஏறிப் புறப்படுகையில் கடலிலே அலை அடிக்கிறது, கடும் காற்று கப்பலைச் சுற்றி மோதுகிறது. எந்தப்பக்கம் போவது என்று தெரியவில்லை. காற்று இழுத்த பக்கம் கப்பல் போய்க்கொண்டு இருக்கிறது. "அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று." (அப் 27:20)

இருள் சூழ்ந்த நிலை, வெளிச்சம் இல்லை. ஓயாத மழை. துரத்தி அடிக்கும் காற்று. இனிப் பிழைப்பதற்கு எந்த நம்பிக்கையும் இல்லை. அன்பான தேவ பிள்ளைகளே! நீங்களும் இதே பாதையில் சென்று கொண்டு இருக்கலாம். இருப்பதோ நடுக் கடல், வழியோ தெரியவில்லை. இனி நம்பிக்கை இல்லை இப்படியான சூழ்நிலையிலே நீங்கள் சென்று கொண்டு இருப்பீர்க இருந்தால் தேவன் உங்களுக்குத் தருகிற வார்த்தை "பயப்படாதே"

பயம் என்பது வேதனை உள்ளது. வேதனையின் முக்கிய அம்சம் பயம். பயம் என்பது சத்துருவின் மிகப் பெரிய ஆயுதம். மூன்று வகையான பயம் உண்டு.

1. தேவனுக்குப்பயப்படும் பயம்.
2. மனுஷருக்குப் பயப்படும் பயம்.
3. சத்துருவுக்குப் பயப்படும் பயம்.

தேவனுக்குப் பயந்து அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிற வேளையிலே, தேவனின் ஆசீர்வாதம் நமது வாழ்க்கையிலே பெருகுகிறது. உபாகமம் 28: 1-14 வரை எழுதப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களும் நமது, உங்களது வாழ்க்கையில் பெருகிகிறது. அதில் விசேடமாக 11ம் 12ம் வசனங்கள் இப்படியாகக் கூறுகிறது. "உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணநன்மை உண்டாகக் கட்டளையிடுவார். ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்."

2 மனுஷருக்குப் பயப்படுகிற பயம் கண்ணியை வரவழைக்கும் என்று வேதம் கூறுகிறது. நமது வாழ்க்கையிலே தேவனை முன்வைக்காமல், தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல் மனுஷர்களை மட்டும் நாம் பிரியப்படுத்தி வாழ்வோமாக இருந்தால் முடிவிலே அது நமது வாழ்க்கையிலே கண்ணியைக் கொண்டுவந்து விடும். எரேமியா 17: 5 இல் "மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

அதுமட்டுமல்ல எரேமியா 17: 6 இல் "அவன் அந்தர வெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர் நிலத்திலும் தங்குவான்." இன்னும் சத்துருவுக்குப் பயப்படும் பயத்தைக் குறித்து உபாகமம் 20: 1,3,4 இல் இப்படிக் கூறுகிறது. "நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ் செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக; உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். இஸ்ரவேலரே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ் செய்யப் போகிறீர்கள்;உங்கள் இருதயம்துவள வேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடேயுத்தம் பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப் போகிறவர்உங்கள் தேவனாகிய கர்த்தர்."

அன்பான தேவபிள்ளைகளே நீங்கள் தேவனை நம்புகிற வேளையிலே எந்தக் காரியத்தைக் குறித்தும் பயப்படக் கூடாது. தாவீது இப்படிச் சொல்லுகிறார் "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள். எனக்கு விரோதமாக ஒரு பாளயம் இறங்கினாலும் என் இருதயம் பயப்படாது. என் மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்." சங்கீதம் 27: 1-3)

<u>அடுத்து நீங்கள் இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும்.</u>

நீங்கள் நடந்து போகிற பாதையில் உங்களுக்கு முன்பாக உங்களைப் பயப்படுத்துகிற காரியங்களில் நீங்கள் தைரியமாக நிற்கவேண்டும். எபேசியர் 6: 11-13 இல் "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திரணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கோள்ளுங்கள்."

ஆம் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கும்படி தேவன் தேவவார்த்தையின் படி போதிக்கிறார். காட்டிலே ஒட்டகச் சிவிங்கி தண்ணீர் குடிக்க வரும்போது சிங்கம் மறைந்திருந்து சிவிங்கியை கொல்ல வகை பார்க்குமாம். சிவிங்கி சுற்று முற்றும் பார்த்து மெதுவாக தனது கால்களை அகலமாக்கி ஏறக்குறைய முட்டுக்காலில் இருக்கும் வேளையிலே, சிவிங்கி சடுதியாக எழும்ப முடியாத சூழ்நிலையிலே சிங்கம் சிவிங்கியைக் கொன்று போடுமாம்.அது போலவே பிசாசின் தந்திரமும். நாம் நிற்க முடியாதபடி பிசாசு தட்டி அடிப்பான். ஆனால் நாம் சத்துருவுக்கு தேவவசனத்தோடு எதிர்த்து நிற்கமுடியும். சத்தியத்தை அறியுங்கள். (Know the word of God) சத்தியத்தைப் பேசுங்கள். (Speak the word of God) சத்தியத்தை தியானியுங்கள். (Meditate the word of God)

சத்தியம், தேவவார்த்தை உங்களை விடுதலையாக்கும். யோசுவா 1: 8 இல் "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைக ளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்."

மேலும், லூக்கா 10: 19 இல் "இதோ, சர்ப்பங் களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துரு வினுடைய சகல வல்லமையையும் மேற் கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கி றேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது." என்று வேதம் போதிக்கிறது. மத்தேயு 28:18 இல் இப்படியாகச் சொல்கிறது. "......வானத்திலும் பூமியிலும் சகல அதிகார மும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது." என்று. அன்பான தேவனுடைய பிள்ளைகளே இன்றைக்கு உங்கள் வாழ்க்கையைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் நிற்கிறீர்களா? அல்லது என்னவாவது நடக்கட்டும் என்று விரக்திப் பட்டுக் கொண்டு இருக்கிறீர்களா? "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவராயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப் பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 5:6-9)

ஆம் மேற் குறிக்கப்பட்ட வார்த்தைகளில் தேவன் நம்மை உயர்த்துவார். அவரது கரங்களுக்குள் அடங்கி இருக்கும்படியும் கூறுகிறது. 7 வது வசனம் அவர் நம்மை விசாரிக்கிறவர், கவலைகளை யெல்லாம் தேவனிடத்தில் வைக்கும்படியும் கூறுகிறது. 8வது வசனம் தெளிந்த புத்தியும் விழிப்பும் இருக்கவேண்டும் என்றும் போதிக்கிறது. அத்தோடு 9 வது வசனம் விசுவாசத்தில் உறுதி யாயிருந்து பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று கட்டளையிடுகிறது.

அன்பான தேவனுடைய ஜனங்களே வாழ்க்கை என்பது ஒரு பிரயாணம். இந்தப் பிரயாணத்தில் நம்மோடு நம்முடைய பிள்ளைகள், கணவன், மனைவி, பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் என்று பிரயாணம் செய்கிறார்கள். நம்முடன் இவர்கள் பிரயாணம் செய்யும் போது அவர்களின் கவலை நம்மை அழுத்துகிறது நம்மை வேதனைப்படுத்துகிறது. என்ன ஆகுமோ என்று தவித்து மனம் பாடாய்ப் படுத்துகிறது கண்ணீர் முட்டி மோதுகிறது. ஆனால் இந்த நாட்களில் தேவன் தருகிற வார்த்தை. "...இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார்." (அப் 27:24) இந்த வார்த்தையை எழுதுகிற வேளையில் தேவ பிரசன்னத்தை உணருகிறேன். இந்தத் தீர்க்க தரிசன வார்த்தையை உங்களுக்குச் சொந்தமாக்குங்கள்.

யாக்கோபு 1:27 இல் "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கி றது." ஆம் நம்மோடு பிரயாணம் பண்ணுகிற திக்கற்ற பிள்ளைகள், விதவைகள் இவர்களை

விசாரிப்பது தேவனுக்குப் பிரியமான காரியம். அது மாசில்லாத சுத்தமான பக்தி என்று வேதம் போதிக்கிறது.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குத் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பைப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்." (எபிரேயர் 11: 6,7) ஆம் நோவா ஒரு மனுஷன். ஒரு குடும்பத் தலைவன். தன் குடும்பத்தில் அன்பு கூர்ந்தவன். தேவனை விசுவாசித்தவன். ஆகவே உலகத்தில் அழிவு வரப்போகிறது என்று தேவனிடத்தில் எச்சரிப்புப் பெற்று, பயபக்தி உள்ளவனாகி பேழையை (பாதுகாப்பை) உண்டுபண்ணினான். அவனிடம் இரண்டு காரியங்கள் காணப்பட்டது.

1. தேவனின் வழிநடத்துதல் (எச்சரிப்பு)

2. தேவனிடத்தில் பயபக்தி

அன்பான தேவ பிள்ளைகளே சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப் படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். நான் பிதாவினிடத்துக்குப் போகிற படியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள்..." (யோவான் 16:13-15) இயேசு தரும் வார்த்தையின் படி பரிசுத்த ஆவியானவரை நாம் சார்ந்து நிற்கும் போது அவர் நம்மை வழிநடத்துவார். அண்மைக் காலங்களில் பரிசுத்த ஆவியானவருக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறைவு. இது மிகவும் துக்கத்துக்குரிய காரியம். பரிசுத்த ஆவியானவரில் நாம் சார்ந்து நிற்காத பட்சத்தில் மாமிசமே நம்மில் தலை தூக்கும்.

வேதம் சொல்கிறது, "மாம்சத்தின் படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தம் படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்." (ரோமர் 8:13-15) ஆம் நமது மாம்சத்தில் சார்ந்து நிற்காமல், மனிதரில் சார்ந்து நிற்காமல் தேவனில் சார்ந்து நிற்போம்.

குடும்பத்திலே கணவன் (Train) றெயின் முன்னுக்குப் போகிற இஞ்சின் போல, மனைவி பிள்ளைகள் பின்னாலே போகிற பெட்டிகள் போல, கணவன் தேவபயம் உள்ளவனாகி, தேவனுக்குப் பயப்படுகிற வேளையிலே அந்தப் பிரயாணம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்.

அடுத்து மோசே என்கிற தேவ மனுசன் ஒரு யாத்திரை பண்ணினார். அவனுடனே இஸ்ரவேல் மனுசர்கள் தேவன் வாக்களித்த பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்துக்குப் போகப் புறப்படுகிறார்கள்.

ஆனாலும் எகிப்தின் ராஜா தனது வல்லமையால், தனது அகங்காரத்தினால், தனது அதிகாரத்தினால் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறான். ஆகவே அவர்கள் புறப்படுவதற்கு முன்பாக தேவனால் அற்புதங்கள், அடையாளங்கள் மோசே மூலமாய் செய்யப்படுகிறது. ஆனாலும் பார்வோனின் இருதயம் கல்லாக கடினமாக அசைவில்லாமல் இருக்கிறது. அப்பொழுது தேவன் ஒரு காரியத்தைச் செய்யும்படி கட்டளையிடுகிறார். "விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்து போவது போலக் கடந்து போனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்து போனார்கள்." (எபி 11:29)

ஆம் யாத்திரகாமம் 12 ம் அதிகாரம் முழுவதையும் வாசிப்பீர்களாக இருந்தால் நீங்கள் விபரமாக விளங்கிக் கொள்ளலாம். ஆகவே அன்பானவர்களே நாம் ஒவ்வொரு நாளும் இயேசுவின் இரத்தத்தை நமது குடும்பத்தில் பூசுகிறவர்களாக, தெளிக்கிறவர்களாக இருக்க வேண்டும். "புது உடன் படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்துக்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்துக்கும் வந்து சேர்ந்தீர்கள்." எபி 12: 24 இல் எழுதப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நன்மைகளைப் பேசுகிறது. இன்னமும் எபிரெயர் 9: 22 இல் "நியாயப் பிரமாணத்தின் படி கொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது." என்று எபிரெயர் 9:22 இல் பார்க்கிறோம். தொடர்ந்து எபிரெயர் 10: 19-22 வரை. "...சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச் சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்."

மேலும் தேவ மனுசனாகிய பவுல் அப் 27:25 இல் சொல்கிறார் "...மனுஷரே, திடமனதாயிருங்கள், எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்." தேவனால் சொல்லப்பட்ட வார்த்தையிலே பவுலுக்கு அத்தனை நம்பிக்கை, விசுவாசம் இருந்தது. தான் மனுஷனிடத்திலோ, வைத்தியரிடத்திலோ, உற்றார் உறவினரிடத்திலோ நம்பிக்கை வைக்காமல் இயேசுக் கிறிஸ்துவினிடத்திலே நான் முழுநம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று கூறுகிறார். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து சொல்கிறார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்." (யோவான் 14:1)

ஆம் தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் நம்பிக்கையை உலகத்தின் மேல், மனுஷர்கள் மேல் வைத்தியர் மேல், உறவினர் மேல் வைக்காமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மேல் வைத்திருங்கள். அவர் உங்களை கைவிடாமல் அரவணைத்து ஆறுதல் தந்து வழிநடத்துவார். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்

சாட்சிகள்

எனது மருமகனின் சகோதரர் யாழ்ப்பாணத்தில் பிரச்சனைகள் மத்தியில் மற்ற எல்லா மக்களோடும் அகதி ஆக்கப்பட்டார். அவர் அனேக மாதங்களாக ஒரு நேரச் சாப்பாட்டுடன் அதுவும் அரிமையாக கஞ்சி கொடுத்தார்கள். போதிய அளவு கஞ்சி கூட கிடைப்பது அரிது. குடிப்பதற்கு தண்ணீர் கூட கிடைப்பது அரிதாக இருந்தது. இப்படியான சூழ்நிலையில் Camp பைச் சுற்றி முள்ளுக் கம்பிளால் சுற்றி அடித்து வைத்திருந்தார்கள். இப்படியான கஸ்டங்கள் மத்தியில் அவர் இருக்கும் போது, அவருக்கு தலை வலி வருவதும் வழக்கம். நாங்கள் அவருக்காக எங்கள் திருச்சபையில் செவ்வாய்க் கிழமைகளில் நடக்கும் ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்து வந்தோம். அவ்வேளையில் அவருடைய தலை வலிக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவருடைய தலை வலி அதிகமானதால் அங்கிருந்தும் அவரை கொழும்பு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்த வேளையிலும் அவருக்காக அந்த வைத்திய அதிகாரி ஆண்டவரிடம் ஜெபம் பண்ணி அனுப்பியிருந்தார். ஜெபங்களைக் கேட்ட ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து அந்த மகனுக்குப் பூரண சுகத்தை கொடுத்ததும் அல்லாமல், அந்தப் பாடுகள் உபத்திரவங்கள் மத்தியில் இருந்து பாதுகாத்து, இப்பொழு Canada வில் அவருடைய உறவினர்களோடு சேர்த்து வாழக் கிருபை செய்தார். ஆண்டவராகிய இயேசுவுக்கே துதிகன மகிமை உண்டாவதாக. "ஆகையால் குமாரன் (இயேசு) உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." யோவான் 8: 36)

சகோதரர் றட்ணரன்ஜித்

ஒரு நாள் எனது மருமகன் மிக கவலையோடு வந்திருந்தார். ஏன் கவலையாக இருக்கிறீர்கள் என்று விசாரித்த போது, அவருடைய அம்மா, அப்பா இருவரையும் ஆமி பிடித்து வைத்திருக்கிறார்கள் அவர்களை எப்படி விடப்போகிறார்களோ என்று மிக கவலையோடு இருந்தார். நான் கூறினேன் யோசித்துக் கொண்டு இருக்காமல் எங்களுடன் Church க்கு வாருங்கோ அவர்களை ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து விடுவிப்பார் என்று. அவர்கள் கீழ்ப்படிந்து குடும்பமாக Church க்கு வந்தார்கள். வந்த இரண்டாவது வாரம் அவர்கள் Church இல் இருக்கும் போது நல்ல செய்தி வந்தது அவருடைய அம்மா அப்பா விடுதலையாகி வெளியே வந்து விட்டார்கள் என்று. ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கே துதி கன மகிமை உண்டாவதாக.

சகோ: கிறிஸ்ரீனா ரஞ்சினி R.

ஆண்டவராகிய இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக. நான் பால மாதங்களாக பலவிதமான போராட்டங்கள் மத்தியில் வேதனையோடும், கண்ணீரோடும் வாழ்ந்து வந்தேன். அந்த வேளையில் நான் ஒரு கடைக்குச் சென்றிருந்தபோது நீங்கள் வெளியிடும் பள்ளத்தாக்கின் வீலியைப் பெற்றேன். அதை எடுத்து வாசித்தபோது, அதில் இருந்த தேவனுடைய வார்த்தைகள் என்னைத் தேற்றியது ஆறுதல் அடைந்தேன். அதன் பின்பு நான் உங்களுடன் தொடர்பு கொண்டேன் நீங்களும் எனக்காகவும் எங்கள் குடும்பத்துக்காகவும் ஜெபம் பண்ணி ஆசீர்வாத வார்த்தையை தந்தீர்கள். எங்களுக்கு ஆறுதலையும், ஆசீர்வதத்தையும் தந்த இயேசுவுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.

சகோதரி தயா

ஆசீர்வாதமான கிறிஸ்தவர்கள்

"எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு." (எபிரெயர் 6:7,8)

இந்த இரண்டு வசனத்திலும் ஆசீர்வாதம் என்கிற வார்த்தையையும் பார்க்கிறோம். சாபம் என்கிற வார்த்தையையும் நாம் பார்க்கிறோம். எனவே கிறிஸ்தவர்களிலே ஆசீர்வாதமான கிறிஸ்தவர்களும் உண்டு, சாபமான கிறிஸ்தவர்களும் உண்டு. ஆனால் நம்மைக் குறித்து எப்படி இருக்க வேண்டு மென்று கர்த்தர் விரும்புகிறாரென்றால் ஆசீர்வாதமான கிறிஸ்தவர்களாய் ஜீவிக்க வேண்டும் என்பது தான் கர்த்தருடைய சித்தம்.

எண்ணாகமம் 24:1 இல் "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 23:8 இல் "தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி? என்று சபிக்க வருகிற பிலேயாம் ஆவியின் நிறைவோடு ஆசீர்வதிக்கிறதைக் காண்கிறோம்.

அன்பு தேவ பிள்ளைகளே! ஆசீர்வாதமான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை நீங்கள் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் ஆவியானவர் இந்த செய்தியைத் தந்துள்ளார். மேலே சொல்லப்பட்ட வசனங்களில் இரண்டு விதமான நிலங்களைப் பார்க்கின்றோம்.

(1) ஆசீர்வாதமான நிலம் (எபிரேயர் 6:7)

(2) சபிக்கப்பட்ட நிலம் (எபிரெயர் 6:8)

கிறிஸ்தவ ஜீவியத்தை நிலத்துக்கு ஒப்பாக வேதம் சொல்கிறது. மத் 13:23 இல் "நல்லநிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருகிறான்" என்று போடப்பட்டுள்ளது. இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படிப் பட்டவர்கள் என்பதை விளங்கிக் கொள்ள நிலமாக இருக்கும். சில நிலங்களோ கனியற்ற அல்லது உவர் நிலமாகக் காணப்படும்.

உவர் நிலத்தில் எதாவது விதைவிதைத்தால் அது முளைக்காது, வளராது, கனி கொடாது, பலன் கொடாது ஆனால் நல்ல நிலங்களில் எதை விதைத்தாலலும்செளிப்பாக முளைத்து பலன் கொடுக்கும்.கடற்கரை அருகிலே உப்பு இருக்கும். கடற்கரை அருகில் உள்ள நிலங்கள் உப்புக் கலந்த மண்ணாயிருக்கும். இன்னும் சில வனாந்தர பகுதிகளும் உவர் நிலமாக இருக்கும். அதை எடுத்து சிறிது வாயில் போட்டால் சாப்பாட்டுக்குப் போடுகிற உப்பு மாதிரியே இருக்கும். அந்த நிலத்தில் எதுவுமே விளையாது. அன்பு சகோதரரே! சகோதரியே! நீங்கள் செழிப்பான நிலமாக இருக்க வேண்டும். ஆசீர்வாதமான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் ஓர் உவர் நிலமாக இருக்கிறோமா? அல்லது செழிப்பான நிலமாக இருக்கிறோமா?

ஆசீர்வாதமான கிறிஸ்தவர்களுக்குள் மூன்று காரியங்கள் உண்டு.

(1) அடிக்கடி மழை பெய்கிற நிலம்:

ஆசீர்வாதமான கிறிஸ்தவனுக்குள் அடிக்கடி மழை பெய்கிறதாம். நம்முடைய தேசங்களில் பல பகுதிகளில் அடிக்கடி மழை பெய்து கொண்டே இருக்கும். அப்பகுதிகளில் எல்லாம் செழிப்பாகவே இருக்ககும். அன்பு தேவ

பிள்ளைகளே! நீங்கள் ஆராதிக்கும் உங்கள் சபையில், விசேஷமாக உங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதமான மழை பெய்கிறதா? எசேக்கியல் 34: 2627 இல் "நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப் புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்ற காலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும். வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத் தரும்; பூமி தன் பலனைக் கொடுக்கும்; அவர்கள் (நீங்கள்) தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்,..."

② பயிரிடுகிற நிலம்:

தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமாக நாம் காணப்பட வேண்டும். ஒவ்வொரு ஊழியக்காரர்களும் தங்கள் சபையில் வசனத்தைப் பயிரிடுகிறார்கள். பதரைப் பயிரிட்டு விடக்கூடாது. வசனத்தை விதைத்து உங்களைத் திராட்சைக் கொடியாகவோ, ஒலிவமரமாகவோ, அத்தி மரமாகவோ, கோதுமை மணியாகவோ உருவாக்க ஊழியர்கள் வேத வசனத்தை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி மழை பெய்கிற நிலம் ஆசீர்வாதமான நிலம். ஆனதைத் தொடர்ந்து தானியங்களை பயிர் செய்கிற நிலமும் ஆசீர்வாதமான நிலம்.

③ பயிரை முளைப்பிக்கும் நிலம்:

நெல் விதைக்கப்பட்டால் நெல் முளைத்து கதிர் கொடுக்கும். கோதுமையை விதைத்தால் கோதுமை முளைத்து பலன் கொடுக்கப்பட வேண்டும். திராட்சை நட்டால் திராட்சை பழத்தைக் கொடுக்க வேண்டும். அத்தி மரத்தை வைத்தால் அத்திப் பழம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்கிற நிலமே ஆசீர்வாதமான நிலம்.

எபேசு பட்டணத்தில் பவுல் மூன்று மாதங்கள் பிரசங்கம் பண்ணினான். பின்பு பவுல் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து தைரியமாய்ப் பிரசங்கித்து மூன்று மாதம் வரைக்கும் தேவனுடைய ராஜ்ஜியத்துக்கடுத்தவைகளைக் குறித்து சம்பாஷனை பண்ணி புத்தி சொல்லிக் கொண்டு வந்தமான்.

ஆனால் அங்கே சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளானார்கள் என்று அப் 19:8,9 இல் சொல்லப்பட்டுள்ளது. பவுல் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து பிரசங்கம் பண்ணினார். உபதேசம் பண்ணினார். இதைத் தான் பவுல் பயிரிட்டார். ஆனால் சிலர் இருதயக் கடினப்பட்டனர். மூன்று மாதம் பிரசங்கம் கேட்ட இவர்கள் அவிசுவாசிகளாக மாறினார்கள். இருதயக் கடினப்பட்டு, அவிசுவாசிகளாக மாறினது மட்டுமல்ல பவுலையும் கூட இருந்த விசுவாசிகளையும் நிந்தித்தார்கள். அன்பு தேவ பிள்ளைகளே! இதைப்படிக்கிற நீங்கள் யாராகிலும் இந்தக் கூட்டத்தாரைப் போல் இருக்கக்கூடாது. பயிரிடுவதற்கேற்ற பயிரை முளைப்பிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். ஜெபத்தைக் குறித்து பிரசங்கம் கேட்டால் ஜெபத்தில் நீங்கள் தீவிரப்பட வேண்டும். "இவள் தன்னால் இயன்ற நற்கிரியைகளைச் செய்தாள்" என்று செய்தி கேட்பீர்களானால் உடனே நற்கிரியை செய்கிறவர்களாய்க் காணப்பட வேண்டும். அர்ப்பணிப்பைப் பற்றி செய்தி கேட்டால் தியாகமுள்ள வாழ்க்கைக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இயேசுவுக்காக வாழும் தியாக வாழ்க்கைக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

அன்புச் சகோதரா! சகோதரி! எத்தனையோ வருடங்களாய் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தும் எத்தனையோ சத்தியங்களைக் கேட்டும், வாசித்தும் வருகிற நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? வசனத்துக்குத்

தக்க வாழ்க்கை வாழ்கிறீர்களா? இல்லாவிட்டால் வசனத்தைக் கேட்ட பின்பு அதற்கு எதிர் மாறாக இருதயக் கடினம், அவிசுவாசம் ஆக கனியற்றவர்களாக இருக்கிறீர்களா? ஏற்கனவே தேவனிடத்தில் விசுவாசமாய் ஜீவிக்கிற உத்தமர்களை நிந்திக்கிற கூட்டமாய இருக்கிறீர்களா?

இரட்சிப்பாகிய ஆசீர்வாதம்:

"சம்பவிப்பதென்னவென்றால்; யூதா வம்சத்தரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்ச்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக் கடவது." சகரியா 8:13 இல் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லியிருக்கிறார். இரட்சிப்பு ஒரு ஆசீர்வாதம். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் நீங்கள் பெற்றிருக்கும் இரட்சிப்பு உங்களுக்குக் கிடைத்த முதல் ஆசீர்வாதமாகும். இது தான் ஆவிக்குரிய முதல் ஆசீர்வாதம்.

வியாதியில்லாத வாழ்வு:

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது மூதோர்களின் பழமொழி. அது முற்றிலும் உன்மையாகும். அதற்கு மேலாக கர்த்தர் சொல்கிறார். "அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்." என்று (யாத்திரகமம் 23:25) இல் பார்க்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு வியாதி வந்த பின் சுகமாவது அல்ல. வியாதி நம்மைத் தாக்காமல் வாழும் வாழ்க்கை ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கையாகும். அன்புச் சகோதரா! அன்புச் சகோதரி! ஆண்டவர் இப்படிப்பட்ட வாழ்க்கையை உங்களுக்குத் தரப்போகிறார். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் பயணம் செய்தபோது அவர்களுக்கு தேவன் வியாதியை விலக்கினார். வாதை அவர்கள் கூடாரத்தை அணுகவில்லை. அவர்கள் கோத்திரங்களில் பெலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை. ஆகவே வியாதி இல்லாத ஒரு வாழ்க்கை ஆசீர்வாதமான கிறிஸ்தவ ஜீவியம்.

சமாதானம்:

"கர்த்தர் தமது ஜனத்துக்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்." என்று சங்கீதம் 29:11 இல் சொல்லப்பட்டுள்ளது. சமாதானம் அருளுவது ஆசீர்வாதமான வாழ்க்கையாகும். உங்கள் குடும்பத்தில் சமாதானம் இருந்தால் நீங்கள் தான் ஆசீர்வாதமான கிறிஸ்தவம். அந்த சமாதானம் முதலாவது நமக்கும், தேவனுக்கும் இடையிலே உண்டானது. நமக்கும் தேவனுக்கும் இடையிலே கலகங்கள், பிரச்சனைகள், வீரோதங்கள் தேவனைத் துன்பப்படுத்தும் எந்த விதமான காரியங்கள் நமக்குள் இருக்குமானால் நமக்கு சமாதானம், சந்தோஷம் இருக்காது. கணவன் மனைவிக்குள் சமாதானமாயிருப்பது ஆசீர்வாதம். கணவனுக்கு விரோதமாய் மனைவியும், மனைவிக்கு விரோதமாய் கணவனும் செயல்பட்டால் அங்கு சமாதானம் கெட்டுப்போய்விடும். பிள்ளைகளுடைய வாழ்க் கையும் கெட்டுப் போய் விடும். பிள்ளை களுடைய வாழ்க்கை ஆசீர்வாதம் பெறவேண்டுமாயின் கணவன் மனைவிக்குள ஒரு அன்புகூடிய பாலம் அமைக்கப்பட வேண்டும். அதைத்தான் ஆண்டவராகிய இயேசுவும் விரும்புகிறார். வேதம் கூறுகிறது "உன் வாசல்களின் தாழ்ப்பாளைப் பலப்படுத்தி உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்குகிறார்." ஆகவே அன்பு தேவ பிள்ளைகளே! குடும்பத்தில் சமாதானத்துடன் வாழ்பவர்கள் ஆசீர்வாதமான கிறிஸ்தவர்கள்.

ஐசுவரியத்தின் ஆசீர்வாதம்:

"கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." (நீதி 10:28) இல் சொல்லப்பட்டுள்ளது. இன்று உலகத்தில் இரண்டு விதமான ஐசுவரியவான்கள் இருக்கிறார்கள். கள்ளக் கணக்கு எழுதி, கொள்ளையடித்து, குறுக்கு வழியிலே சம்பாதித்து, ஐசுவரியவான்களாக மாறுகிறவர்களும் உண்டு. தேவனுக்குப் பயந்து உண்மை பேசி உத்தமமாய் நடந்து, கஷ்டப்பட்டு படிப்படியாய் ஐசுவரியவான்களாக மாறுகிறவர்களும் உண்டு. தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தர் கொடுக்கும் ஐசுவரியம் வேதனையில்லாத ஐசுவரியம். உலக மனிதர்கள் சேர்க்கும் ஐசுவரியம் வேதனையுள்ளது. ஐசுவரியம் பெருகும் போது வேதனையும் சேர்ந்து பெருகிறது. உலக மனிதர்கள் ஐசுவரியத்தை சம்பாதிக்கும் போது அநீதியான முறையில் சம்பாதிக்கிறபடியால் முதலாவது தேவனுடைய சாபத்துக்கு காரணர்களாய் மாறி விடுகிறார்கள். பின்பு இவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் விடும் கண்ணீர்களும் இவர்களுக்குச் சாபமாக மாறுகின்றது.

வேதம் கூறுகிறது "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள். (சங்கீதம் 1:1-4)

ஆசீர்வாதத்தைத் தரும் தேவ வார்த்தைகள்:

"கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்." (நீதி 10:28)


"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவனாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்." (ஆதி 26:12,13)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்...." (ஆதி 12:2,3)

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்...." (ஆதி 22:17)

"...கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்." (ஆதி 24:1)

"ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப் பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்..." (ஆதி 26:4,5) "இந்தத் தேசத்தில் வாசம்பண்ணு; நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்..." (ஆதி 26:3) ஆமென்



NO STRESSING!
FINE: GOD WILL DEAL WITH YOU!

note: All Bible passages are in the Amplified Version, which is more thoroughly defined

Greetings to you all, by the Blood of the Lamb. As apostle Paul once wrote in the Book of **Galatians 1:3-5 (Amp.)** *"3Grace and spiritual blessing be to you and [soul] peace from God the Father and our Lord Jesus Christ (the Messiah), 4Who gave (surrendered) Himself up [in agreement] for our sins [and to save and purify us], in order to rescue and deliver us from this present wicked age and world order, in accordance with the will and purpose and plan of our God and Father. 5To Him [be credited all] the glory through all the ages of the ages and the eternities of the eternities! Amen."*

God has yet again blessed us with a New Year. Many of you may have resolutions and promises for the year. You may be regretting the past years or trying for a better year, but this year is THE year of deliverance, THE year of wonder, and THE year of many blessings. God has a plan for every individual and His promises are true and Holy!

You may be stressed with the days to follow, or even the days of the past. Someone may have hurt you, or you may be going through a financial obstacle. Even jobs and family come in our paths of living a stress-free life, but **Proverbs 3:5-6 (Amp.)** says, *"Trust in the Lord and do not lean on your own understanding."* I go through a lot of stress; school, church, working, and even my family. Even with these different stresses coming my way, I lay all my burdens upon the Lord. Although at the times of giving up, I turn to Christ Jesus, for He has always been the backbone of my life. It may be the simplest problem or the most difficult pain, but God's Word and wisdom has followed me through the days.

As King David rejoices in his **146 Psalm (Amp.) verses one and two**, *"1Praise the Lord! (Hallelujah!) Praise the Lord, O my soul! 2While I live will I praise the Lord; I will sing praises to my God while I have any being." David praised God. Because of his gave thanksgiving to God, God raised him up. With all of his problems, David could have run away, he could have given up; he could have done nothing at all. Instead, David praised God.*

Look at a young child, they cry for certain reasons, food, changing, sleep, love etc... Parents run to comfort and tend to their crying child. Eventually, the little one stop crying, and instead laughs or sleeps. Just like the innocence of kids, we all should trust our superior, Father God. He will always provide for you. According to **Matthew 7:7-8 (Amp.)** *"7Keep on asking and it will be given you; keep on seeking and you will find; keep on knocking [reverently] and [the door] will be opened to you. 8For everyone who keeps on asking receives; and he who keeps on seeking finds; and to him who keeps on knocking, [the door] will be opened."* When you place your trust upon the Lord, you will receive a sense of peace and understanding.

Let us look at King David again, but as a young boy. His greatest obstacle was the Giant, Goliath. When David decided to fight Goliath, the Palestine looked down on him and made fun of him. David could have turned away, but he did not back down. Instead he says in, **1 Samuel 17: 45-47(Amp.)**, *"45...You come against me with swords and spears and javelins, but I come against you in the name of the Lord Almighty... 46 This day the Lord will deliver you into my hands... and the whole world will know that there is a God in Israel. 47 All those gathered here will know that it is not by sword or spear that the Lord saves; for the battle is the Lord's, and he will give all of you into our hands."* The world today has a vast amount of problems, including natural disasters, family problems, accidents, diseases of the body, and especially stress, but you need to say out loud, "I come against you [the obstacle] in the name of the Lord, Jesus the Almighty." Say it over and over again. Do not let the Devil's plans get in the way of the **Divine plan**. Jesus says, "The Devil comes to steal, kill, and destroy. But I [Jesus] came in order to give [a rich and satisfying] life," John 10:10 (Amp.). Jesus did not come down to our world to give us pain and suffering, He does not wish for us to stress. He came to this world to show us His ultimate and undying love for **His chosen people**, so that we can witness that love and speak out to those who do not know of this great miracle.

Do you know that stress is a simple emotion? Your heart reacts at a rapid speed, but your mind thinks of useless thoughts. Stressing substitutes the smart thinking and instead establishes the negative thinking. What you need to learn is how to meditate (with God's Word) so that when you are on the verge of stressing, you can automatically set your mind to deal with the stress through God's Word. You need to

meditate on the Word, you need to prepare yourself, and you need to pray. You will see a change in your life, you will be happier, and the stress will slowly disappear.

One lesson my mother has taught our church repeatedly, is to laugh. She would preach up on the stage, and randomly laugh, "HA, HA, HA!" She tells the congregation that they need to laugh at the problem and the Devil. Watching her always makes me laugh, but I have seen through the years that she is happier than she has ever been before. Yes, she does stress here and there, but she relies on God's peace upon her heart, mind and soul. If God is on our side, how can the Devil win? Well, the Devil will not win. You need to have faith in God and laugh, because the Devil's plans are going to FAIL! Why should you give in to your problem? Why should your troubles weigh you down? The scripture says in **Proverbs 17:22 (Amp.)** *"22A happy heart is good medicine, and a cheerful mind works healing, but a broken spirit dries up the bones."* Laugh at the Devil, laugh at your problem(s), laugh when you are sad, laugh when you are happy, and laugh just because God is good. **1 Samuel 16: 7 (Amp.)** tells us, *"For the Lord sees not as man sees; for man looks on the outward appearance, but the Lord looks into the heart."* The world may see you on the outside, but God is the one who looks at your heart. He sees you and only you. You need to stay positive and happy. You need to let the Devil know that he cannot mess around with you. King David praises God by saying in **Psalms 118: 6 (Amp.)** *"6The Lord is on my side; I will not fear. What can man [the Devil and the problem(s)] do to me?"*

Another way of dealing with stress is by praying and praising, pray your soul out. **Psalms 55:22 (Amp.)** *"22Cast your burden on the Lord [releasing the weight of it] and He will sustain you; He will never allow the [consistently] righteous to be moved (made to slip, fall, or fail)."* Since God sent His Son, Christ Jesus, to pay for all sins and to take all the evil from the world, why should you be burdened? Why should you be troubled? God created you and me to be happy, to praise Him, and to fulfill His glory. Praise Him and thank Him. Look at everything you have, look at the blessings you have and just say, "I love you, God." Praying is a way to communicate with God. You can talk, cry, and praise Him through prayer, and no matter what the situation, God will always listen to your prayer. The hardest part to any situation is to stay positive, but you need to stay positive in order to receive a blessing. How can you ask of something to God with hope, but then doubt in your heart? **James 1: 6 (Amp)** says, "6Only it must be in faith that he asks with no wavering (no hesitating, no doubting). For the one who wavers (hesitates, doubts) is like the billowing surge out at sea that is blown hither and thither and tossed by the wind." Therefore, stand firm in your prayers, and God will always deliver you at your times of difficulty. With God's words in your heart, your mind starts to release all the negativity, and bring in the positivity (on a daily basis).

The Sunday School and Youth Group at my church started this year off with a list of prayer requests (a vision of change). We broke it off into categories: personal prayers (certain areas we would like to improve on), family prayers (including those who don't know God yet), church prayers (prayer requests for the adults and church improvement), international prayers (Sri Lanka and War-Torn countries), and most importantly the salvation for people in Toronto. According to **Habakkuk 2:2 (Amp.)** we should, *"2...Write the vision and engrave it so plainly upon tablets that everyone who passes may [be able to] read [it easily and quickly] as he hastens by."* This is another way of releasing your stress, pray for others. Try not thinking of your stress and start thinking of those who need help, (those who are in a worse situation than you) and pray. *"10Humble yourselves [feeling very insignificant] in the presence of the Lord, and He will exalt you [He will lift you up and make your lives significant],"* **James 4:10 (Amp.).**

Trust in the God Almighty; depend on God with everything you do. Attack your troubles by the name of the Lord. Pray, meditate, and worship Him alone. Laugh and smile; stay positive, not negative. Most importantly, humble yourself before the Lord. **I ask of God's *"2Grace (favour and spiritual blessing) to you and peace from God our Father and the Lord Jesus Christ (the Messiah, the Anointed One),"* 2 Corinthians 1:2 (Amp.).** Let your year be blessed with many joys and happiness. Please send in your prayer requests by e-mail, mail, or by calling.

If you wish for us to call you for prayer, please inform us.
Keep smiling, praying, and honouring Him alone, your sister in Christ Jesus,
Beulah Elisha Logan ☺

சத்தியவேத திருச்சபையின்

பள்ளத்தாக்கின் லீலி

வெளியிடுபவர்: பாஸ்டர் எலிசா லோகன்

ஆசிரியர்: சகோதரி நகோமி லோகன்

Tel:(416) 516-7701

Cell: (647) 405-8273 Fax: (416) 657-8273

இப்பத்திரிகையின் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, சாட்சிகளை எங்களுக்கு எழுதுங்கள். அது மட்டுமல்ல இப்பத்திரிகைக்கு ஓய்வு கொடுக்க வேண்டாம். குறைந்தது பத்துப் பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். மேலதிக பத்திரிகைகள் தேவையானாலும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். சத்தியவேத திருச்சபையின் ஒவ்வொரு ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். விசேஷமாக இந்தப் பள்ளத்தாக்கின் லீலி பத்திரிகை தொடர்ந்து வெளிவரவும், இதனுடைய தேவைகள் சந்திக்கப்படவும், இதன் மூலமாக அநேக மக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தப்பட வேண்டும் என்றும் ஜெபியுங்கள்.

முகவரி **Mailing Address**

Pastor Elisha Logan

34 Ford St.

Toronto, Ontario Canada M6N – 3A1

சத்தியவேத திருச்சபை **Scarborough**

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10:00 மணிக்கு

சிறுவர்களுக்கான ஓய்வு நாள் பாடசாலையும்,

வாலிபர்களுக்கான வேதப்படிப்பும்,
பெரியவர்களுக்கான வேதப்படிப்பும்,
காலை 10:45 மணிக்கு தியான
ஆராதனையும் நடைபெறும்.

இடம்:

250 Warden Ave. (Warden & Kingston)

சத்தியவேத திருச்சபை **Toronto**

ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3.30 மணிக்கு

தியான ஆராதனை நடைபெறும்.

இடம்:

1140 Bloor St. West.

(Dufferin & Bloor)